செ.வெ.எண்: 31/செப்டம்பர் நாள்: 23.09.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## சத்துணவு அமைப்பாளர்/சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் 31.08.2020 வரை காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் / சமையல் உதவியாளர்கள் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சத்துணவு அமைப்பாளர் / சமையல் உதவியாளர் ஆகயோர்களுக்கான காலிப்பணியிட விபரம் இனச்சுழற்சி ஒதுக்கீட்டுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகங்களில் விளம்பரம் செய்யப்படும்.

**அமைப்பாளர் பணிக்கான தகுதிகள்:**

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பம் செய்யும் நாளில் (01.09.2020)இல்**

**கல்வித் தகுதி:** பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 10வது வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) 8வது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 21 வயது நிரப்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) 18 வயது நிரப்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

**பிற தகுதிகள்:** நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

**சமையல் உதவியாளர் பணிக்கான தகுதிகள்:**

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

**<u>விண்ணப்பம் செய்யும் நாளில் (01.09.2020)இல்</u>**

**<u>கல்வித் தகுதி:</u>** பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 5ம் வது வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சி பெறாதவராக இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

**<u>வயது வரம்பு:</u>** பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 21 வயது நிரப்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) 18 வயது நிரப்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

**<u>பிற தகுதிகள்:</u>** நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சத்துணவு அமைப்பாளர் / சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு 24.09.2020 முதல் 30.09.2020 வரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய / நகராட்சி ஆணையாளர் அலுவலகங்களுக்கு மாலை 5.00 மணி வரை விண்ணப்பங்களை அனுப்பலாம். விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிச் சான்றிதழ், வயதுச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும் இருப்பிடச் சான்று ஆகியவற்றின் அத்தாட்சி செய்யப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் அதற்கான சான்று நகல் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தேசிய அடையாள அட்டை அதற்கான சான்றிதழின் நகல் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**